செய்தி வெளியீடு எண்: 24 நாள்: 19.04.2019

விழுப்புரம் மாவட்டத்தில் விழுப்புரம் நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட ஆறு சட்ட மன்ற தொகுதிகளில் நடைபெற்ற வாக்குபதிவு செய்யப்பட்ட இயந்திரங்களை( EVM மற்றும் VVPAT )அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் உள்ள Strong Room – ல் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன், இ.ஆ.ப,
பொதுப் பார்வையாளர் திரு.மொஹிந்தர் பால்.இ.ஆ.ப மற்றும் வேட்பாளர்கள் முன்னிலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு சீல் வைக்கப்பட்டது.

------

விழுப்புரம் மாவட்டத்தில் விழுப்புரம் நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட ஆறு சட்ட மன்ற தொகுதிகளில் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் வாக்குபதிவு செய்யப்பட்ட இயந்திரங்களை( EVM மற்றும் VVPAT )அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி வாக்கு எண்ணும் மையத்தில் உள்ள Strong Room – ல் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன், இ.ஆ.ப, பொதுப் பார்வையாளர் திரு.மொஹிந்தர் பால்.இ.ஆ.ப, மற்றும் வேட்பாளர்கள் ஆகியோர் முன்னிலையில் இன்று ( 19.04.2019 )பாதுகாப்பாக வைக்கப்பட்டு சீல் வைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன், இ.ஆ.ப, அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

நாடாளுமன்ற தேர்தல் 18.04.2019 அன்று நடைபெற்றது. அதன் பின்னர் விழுப்புரம் நாடாளுமன்ற தொகுதிகுட்பட்ட ஆறு சட்ட மன்ற தொகுதிகளில் 1723 வாக்குசாவடிகளில் நடைபெற்ற தேர்தலில் பயன்படுத்தப்பட்ட வாக்குபதிவு செய்யப்பட்ட இயந்திரங்களை( EVM மற்றும் VVPAT ) இன்றைய தினம் பொதுப் பார்வையாளர் திரு.மொஹிந்தர் பால்.இ.ஆ.ப, மற்றும் வேட்பாளர்கள் ஆகியோர் முன்னிலையில் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி வாக்கு எண்ணும் மையத்தில் உள்ள Strong Room – ல் பாதுகாப்பாக வைக்கப்பட்டு சீல் வைக்கப்பட்டது. மேலும் இந்த Strong Room – CCTV Camera மூலம் கண்காணிக்கவும் மற்றும் மூன்றடுக்கு பாதுகாப்பான மத்திய பாதுகாப்பு படையினர்(CRPF), ஆயுதம் தாங்கிய பாதுகாப்பு படையினர்(ARPF), மாவட்ட காவல் துறையினர்(DPF) ஆகியோர் பாதுகாப்பு பணியில் 24 மணி நேரமும் கண்காணிக்கும் வகையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்த வாக்கு எண்ணும் மையத்தில் இரண்டு கட்டுப்பாட்டு அறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒன்று மாவட்ட நிர்வாகம், மாவட்ட காவல் துறையினர் கண்காணிக்கும் வகையிலும், மற்றொன்றில் வேட்பாளர்கள், முகவர்கள் கண்காணிக்கும் வகையில் இக்கட்டுப்பாட்டு அறை இயக்கப்பட்டு கண்காணிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து இவ்வாக்கு எண்ணிக்கை நடைபெறும் மையத்தில் விழுப்புரம் நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட ஆறு சட்ட மன்ற தொகுதிகளில் வாக்கு பதிவு மையங்களில் நடைபெற்ற வாக்கு பதிவுகள் குறித்து ஆய்வு (Scrutiny) பொதுப் பார்வையாளர் திரு.மொஹிந்தர் பால்.இ.ஆ.ப, அவர்கள் முன்னிலையில் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன், இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஜெயக்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.பிரியா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.மகேந்திரன், சார் ஆட்சியர்கள் திருமதி.மெர்சி ரம்யா,இ.ஆ.ப, (திண்டிவனம்), திருமதி. சாருஸ்ரீ,இ.ஆ.ப,(திருக்கோவிலூர்) மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) திரு.பிரபாகர், வட்டாட்சியர் (தேர்தல்) திரு.சீனிவாசன் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், வேட்பாளர்கள், முகவர்கள் மற்றும் வருவாய் துறை அலுவலர்கள், வருவாய் ஆய்வாளர்கள் உட்பட பல்வேறு துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.